**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar)
Preliminary Register) SC.15/2024
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.5
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | சிவசுப்பிரமணியன் | -- | |
| Father's Name | முருகையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of February 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேத்தூரில் குடியிருந்து வருகிறேன். தளவாய்புரத்தில் சுமைதூக்கும் பணியளராக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாச்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் 1 மணியளவில் மேற்படி கையெழுத்துகளைக் போட்டேன். சேத்தூர் போலீசார் கோட்டுக்கொண்டதால் கையெழுத்தைப்போட்டேன். கஜேந்திரக்குமார் வழக்கு சம்பந்தமாக சாட்சியாக செர்த்திருப்பதாக சொல்லி கையெழுத்துக் கேட்டார்கள். ஆஜர் எதிரி எங்கள் ஊர்காரர்தான் போலீசார் என் முன்னிலையில் எதியிடமிருந்து எந்த பொருள்களும் கைப்பற்றப்படவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும அ.சா.ஆ.3, அத்தாட்சியில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4.

(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 07.03.2023 தேதி மாலை 06.15 மணிக்கு சேத்தூர் அவுட்டர் பஸ் டாப் அருகே நானும் எனது நண்பர் வைரம் என்பவர் இருந்த போது. பேலீசர் எதிர் ஈ'ஸவரனிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் ஒரு அரிவாளை கைப்பற்றினார்கள் என்று போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு

தற்போது எதிரி என் அப்பாவிற்கு நண்பர் என்பதால் தெரியாது என்று மாற்றிக்கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of February 2026 .

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**